


24. 08. 2026

தலைப்புச் செய்திகள்

- தமிழ்நாட்டில் மகளிருக்கு ஆண்டுக்கு 3 விலையில்லா சிலிண்டர் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.
- மகளிருக்கான கட்டணமில்லா பயண திட்டம் மாநகர, நகர பேருந்துகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.
- தமிழ்நாட்டில் 728 கோடி ரூபாய் செலவில் அரசு பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.
- தமிழக சட்டப்பேரவையில் இருந்து திமுக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.
- மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஆவணி திருவிழாவின், பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்வு இன்று விமரிசையாக நடைபெற்றது.
- இலங்கைக்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 8 விக்கெட் இழப்பிற்கு 458 ரன் எடுத்திருந்தது.

இனி விரிவான செய்

**************

முதலமைச்சர் 110

தமிழ்நாட்டில் அன்னபூரணி சூப்பர் 6 திட்டத்தின் கீழ் மகளிருக்கு ஆண்டுக்கு 3 இலவச சிலிண்டர் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110-ன் கீழ் இன்று மூன்று அறிக்கைகளை தாக்கல் செய்து பேசிய அவர், பயனாளிகளின் வங்கி கணக்கில் சிலிண்டருக்குரிய கட்டணத்தை அரசே செலுத்தும் என்றார்.

ஆண்டு வருமானம் இரண்டரை லட்சம் ரூபாய் வரம்பிற்குள் இருப்பவர்கள், குறு சிறு விவசாய குடும்பத்தினர், மாற்றுத்திறனாளிகள் என ஒருகோடியே 30 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இதன்மூலம் பயனடைவார்கள் என்றார்.

வரும் ஜனவரி மாதம் முதல் இந்த திட்டம் நடைமுறை படுத்தப்படும் என்றும் இதற்காக அரசுக்கு, ஆண்டுக்கு நான்காயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்றும் கூறினார்.

சென்னைக்கு அருகே பரந்தூர் பகுதியில் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்தை இந்த அரசு கைவிடுவதாகவும் முதலமைச்சர் அறிவித்தார்.

வாய்ஸ்

அதிக அளவில் விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் பாதிக்கா வண்ணம் புதிய இடத்தில் விமான நிலையம் அமைக்க துறை வல்லுநர்கள் கல்வியாளர்கள் ஆகியோருடன் ஆலோசனை கலந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்யும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் புதிய விமான நிலையம் அமையும் வரை, விமான நிலையத்தின் விரிவாக்கம் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

மாநகர பகுதிகளில் மகளிர் பயணித்து வரும் கட்டணமில்லா பயண திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றார்.

இதன் அடிப்படையில் முதற்கட்டமாக மாநகர நகர பகுதிகளில் உள்ள எக்ஸ்பிரஸ், L.S.S மற்றும் டீலக்ஸ் பேருந்துகளிலும் மகளிர் கட்டணமின்றி பயணிக்கலாம் என அவர் அறிவித்தார்..

அதேபோல் மாவட்டங்கள் இடையே புறநகர் பகுதிகளிலும், மலை பகுதிகளிலும் இயக்கப்படும் சாதாரண பேருந்துகளிலும் மகளிர் இனி கட்டணமின்றி பயணிக்கலாம் என்றார்.

இத்திட்டம் மகாத்மா காந்தியடிகள் பிறந்த அக்டோபர் 2ஆம் தேதி செயல்பாட்டிற்கு வரும் என்றும், திருநங்கையர்களும் இந்த திட்டத்தின் கீழ் பயனடையலாம் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

**************

ஆதவ் அர்ஜூனா - ராஜ்மோகன்

தமிழகத்தில் அரசு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கட்டிடங்கள் தனியாருக்கு இணையாக சிறந்த முறையில் கட்டிப்பராமரிக்கப்படும் என்று அமைச்சர்கள் திரு.ஆதவ் அர்ஜூனா, திரு.ராஜ்மோகன் ஆகியோர் தெரிவித்தனர்.

தமிழக சட்டப்பேரவையில் நகராட்சி நிர்வாகம், பள்ளி கல்வி, உயர்கல்வித்துறைகளின் மானியக்கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதங்களின் போது குறுக்கீட்டு பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, மாநிலத்தில் ஆறாயிரத்து 620 அரசு கல்வி நிறுவன கட்டிடங்களின் பராமரிப்பு சரியான நிலையில் இல்லை என்றும் பல பள்ளிகளில் கழிப்பறை வசதிகள் இல்லை என்றும் கூறினார்..

சட்டப்பேரவை உறுப்பினர்கள் தத்தம் தொகுதியில் உள்ள அரசு பள்ளிகள் கல்லூரிகளில் என்னென்ன அடிப்படை வசதிகள் தேவை, வகுப்பறைகள் கட்டிடங்கள் நிலை என்ன என்பது குறித்து அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பயன்படுத்த முடியாத கட்டிடங்கள் சிவப்பு அடையாளத்துடன் சீல் வைக்கப்படும்,

உடனடியாக சீரமைக்க வேண்டிய கட்டிடங்களில் மஞ்சள் அடையாளம் ஒட்டப்படும்,

ஐந்து ஆண்டுகளுக்கு பயன்படுத்த கூடிய கல்வி கட்டிடங்களுக்கு பச்சை அடையாளம் ஒட்டப்படும் என்றார்.

பள்ளி கல்வி மற்றும் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் பேசுகையில் ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட பள்ளிகளில் 728 கோடி ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்றார்.

*************

வினோத்

காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பயிர் பாதிப்புகள் கண்டறியப்பட்டால் உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு.வினோத் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அஇஅதிமுக சட்டப்பேரவைக்குழு தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கொண்டு வந்த கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்து பேசிய அவர், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பயிர் பாதிப்பு எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை என்றார்.

**************

ரஞ்சித் குமார்

தமிழ்நாட்டில் பாதுகாக்கப்பட்ட வன பகுதிகளில் மனித - விலங்கு மோதலை குறைப்பதற்காக ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு.ரஞ்சித் குமார் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இதுதொடர்பான கவன ஈர்ப்பிற்கு இன்று பதில் அளித்த அமைச்சர், சென்ற வாரம் இரண்டு பேரை புலி தாக்கி கொன்றுள்ளதாகவும், புலியை பிடிப்பதற்காக மூன்று நிபுணர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்த புலி பிடிபட்டவுடன் சென்னை வண்டலூர் பூங்காவிற்கு அல்லது அருகில் உள்ள புலிகள் முகாமிற்கு கொண்டு செல்லப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

**************

ஜே.சி.டி. பிரபாகர்

தமிழக சட்டப்பேரவையில் வரும் வியாழக்கிழமை முதல் கேள்வி நேரம் எடுத்துக்கொள்ளப்படும் என்று பேரவை தலைவர் திரு.ஜே.சி.டி. பிரபாகர் அறிவித்தார்.

நாளொன்றுக்கு 2 கவன ஈர்ப்பு தீர்மானங்கள் விவாதத்திற்கு அனுமதிக்கப்படும் என்றும் கூறினார்.

*************

வெளிநடப்பு

தமிழக சட்டப்பேரவையில் இருந்து திமுக உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் பரந்தூர் விமான நிலைய திட்டம் கைவிடப்படுவதாக அறிவித்தது குறித்து விவாதிக்க வேண்டும் என்று சட்டமன்ற எதிர்கட்சி துணை தலைவர் திரு.கே.என்.நேரு பேரவை தலைவரை கேட்டுக்கொண்டார்.

விதி 110ன் கீழ் முதலமைச்சரோ, அமைச்சர்களோ அறிவிப்பு செய்த பின்னர் அதன்மீது எந்த ஒரு விவாதத்தையும் அனுமதிக்க முடியாது என்று பேரவை தலைவர் பதில் அளித்தார்.

இதனை ஆட்சேபித்து திமுக உறுப்பினர்கள் அனைவரும் பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் மீண்டும் அவை நடவடிக்கைகளில் பங்கேற்றனர்.

*************

இரங்கல்

தமிழக சட்டப்பேரவையில் பிரபல திரைப்பட நடிகை சௌகார் ஜானகியின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தின் மீது பேரவை தலைவர் திரு.ஜே.சி.டி பிரபாகர் பேசினார்.

தமிழ் தெலுங்கு மலையாளம் இந்தி உள்ளிட்ட 400-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து 4 தலைமுறைகளுக்கு மேல் திரையுலகில் கோலோச்சிய அவருடைய மறைவு ஒரு சகாப்தத்தின் நிறைவு என்றார்.

மத்திய அரசின் பத்ம ஸ்ரீ விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்ற சிறப்புக்குரிய சௌகார் ஜானகியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதாக பேரவை தலைவர் குறிப்பிட்டார்.

பின்னர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌனம் அனுசரித்தனர்.

**************

கோவில்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் ஆவணி மூலத்திருவிழாவின் முக்கிய நிகழ்வான இறைவன் பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்வு இன்று விமரிசையாக நடைபெற்றது.

முன்னதாக அருள்மிகு சுந்தரேஸ்வரரும் மீனாட்சி அம்மனும், மேள தாளங்கள் முழங்க பரிவாரங்களுடன் புட்டு தோப்பு மண்டபத்தில் எழுந்தருளினர்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

**************

திண்டுக்கல்

ஓணம் பண்டிகையை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையில் காய் கனிகளின் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

இன்று ஒரே நாளில் 10 கோடி ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனை ஆனதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

**************

ராமநாதபுரம்

ராமநாதபுரம் மாவட்டத்தில் இன்றுமுதல் மறு உத்தரவு வரும் வரை மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதி ரத்து செய்யப்படுவதாக மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட மீன்பிடி விசைபடகும், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப்படகும் கடலுக்குள் செல்லவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

தண்ணீர் திறப்பு

வேலூர் மாவட்டம் குடியாத்தம் மோர்தானா அணையை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லீலா அலெக்ஸ் பாசனத்திற்காக இன்று திறந்துவைத்தார்.

அடுத்த 9 நாட்களுக்கு 174 . 96 மில்லியன் கன அடி வீதம் திறக்கப்படும் இந்த தண்ணிர் மூலம் 8 ஆயிரத்து 366 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

**************

சி.பி. ராதாகிருஷ்ணன்

வேளாண்மையில் சுய சார்பை எட்ட இந்தியா புதுமையான உள்நாட்டு தொழில்நுட்பங்களுடன் செயலாற்றி வருவதாக குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் முசுனூரில் மரபணு மாற்றம் செய்யப்படாத அதிக வளர்ச்சி திறன் கொண்ட மக்காச்சோள கலப்பின விதையினை அறிமுகம் செய்து பேசிய அவர், இந்த சாதனை இந்திய விவசாய தொழில்முனைவோரின் வலிமையை பறைசாற்றுவதாக கூறினார்.

விவசாயம் புதுமையுடன் கூடிய தொழில்நுட்பம் சார்ந்ததாகவும், லாபகரமானதாகவும் மாற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

**************

நிதி உதவி

ஜெனிசிஸ் தொழில்முனைவோர் உறைவிட திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற மாணாக்கரும், தொழில் முனைவோரும், புதுமை

சிந்தனையாளர்களும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் அழைப்பு விடுத்துள்ளது.

கோவையில் உள்ள மெய்ட்டி ஸ்டார்ட் அப் மையம், இரண்டாம், மூன்றாம் அடுக்கு நகரங்களை சேர்ந்த மாணவர்கள், தொழில்முனைவோர் ஆராய்ச்சியாளர்கள் படைப்பாற்றல் திறனாளர்களுக்கு உதவும் வகையில் இந்த திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும்.

**************

கிரிக்கெட்

இலங்கைக்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 8 விக்கெட் இழப்பிற்கு 468 ரன்னுடன் வலுவான நிலையில் உள்ளது.

5 விக்கெட் இழப்பிற்கு 300 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் கொழும்பில் இன்று ஆட்டத்தை இந்தியா தொடர்ந்த நிலையில் ஷரன்ஸ் ஜெய்ன் 6 ரன்னுக்கும், ரிஷப் பந்த் 63 ரன்னுக்கும் மானவ் சுதர் 18 ரன்னுக்கும் ஆட்டமிழந்தனர்.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது